Drinking water supply for flats in Foreshore Estate.

* 640 Q.—THIRU N. V. GURUSAMI : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether there is any proposal under consideration to provide tap connections for the supply of drinking water for all the flats under the Low Income Group scheme in the Foreshore Estate; and

(b) if so, the present stage thereof ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) பட்டினப்பாக்கத்தில் உள்ள குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான குடியிருப்புகளுக்குத் தனித்தனியாகக் குழாய்கள் அமைத்து குடிதண்ணீர் வழங்குவதற்கான வேலை நடைபெற்று வருகிறது. மாநகராட்சியின் குடிதண்ணீரைச் சேமித்து வைக்கவும், மேல்நிலைத் தொட்டிக்குத் தண்ணீரை மேலேற்றவும், இரு தொட்டிகள் பூமி மட்டத்தில் கட்டிமுடிக்கப் பட்டுவிட்டன. தேவையான பம்பு செட்டுகளும் சேகரிக்கப்பட்டு விட்டன. குடியிருப்புகளுக்குக் குடிதண்ணீர் வழங்க சென்னை மாநகராட்சியையும், இயந்திரங்களுக்கு மின்சாரம் வழங்கு வதற்காக சென்னை மின்சார வாரியத்தையும் வீட்டுவசதி வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது. கூடிய சீக்கிரத்தில் இவ்வேலை முடிந்து விடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

THIRU K. M SUBRAMANIAM : Sir, although we appreciate the arrangements that are being made, I want to know whether there is any possibility of getting sufficient quantity of water for all these purposes ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, மாநகராட்சியோடு அது சம்பந்தமாகப் பேசி முடிவு செய்யப் பட்டிருக்கிறது. தண்ணீரைத் தேக்கிவைப்பதற்காக ஸலம்ப்கள் ரூ. 88,530 செலவில் கட்டப்பட்டிருக்கின்றன. அதற்கான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. விரைவிலே 663 வீடுகளுக்குத் தண்ணீர் வழங்குவதற்கான வேலைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்வி.

போதுமான துணைக் கேள்விகள் போட அனுமதிக்காதது குறித்து.

திரு. நா. வீராசாமி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், கேள்வி நேரம் என்பது ஒரு மணி நேரம் என்று பொதுவாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வசதியாக இருக்கும்பொருட்டு விதிமுறைகளிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்றையதினம் முக்கியமான கேள்விகள் வந்திருந்தும், முதல் கேள்வி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்கவேண்டிய கேள்வி, அதற்கே கூடத் துணைக் கேள்விகள் அதிகமாக அனுமதிக்கப்படவில்லை. நாங்கள் எல்லாம் கையைத் தூக்கிக்கொண்டே இருந்தோம். பிறகு வந்த கேள்வி கண்ணகி கோயிலைப்பற்றிய கேள்வியும் முக்கியமான கேள்வி, அதற்கும் போதுமான துணைக் கேள்விகள் அனுமதிக்கப் படவில்லை, இது முறைதானா? உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. நீங்கள் நினைத்தால் சப்ளிமெண்டரிகள் போடுவதற்கு அனுமதிக் கலாம். நாங்கள் எல்லாம் மிக ஆர்வத்தோடு கைகளைத் தூக்கியும் கூட அதற்கு வாய்ப்பு அளிக்காமல் இருப்பது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொல்வது சரியல்ல. முதல் கேள்வி எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது நான் சுற்றும்முற்றும் பார்த்தேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்த்தார்கள் என்று கருதுகிறேன். அது முதல் கேள்வியாக இருந்ததால் டேபிளிலே வைக்கப்பட்ட கேள்விகளை யாரும் படிக்க முடிய வில்லை, இரண்டாவது கேள்விக்கு நான் சென்றுவிட்ட பிறகு நீங்கள் கையைத் தூக்கியிருக்கலாம் என்று நினைக்கிறேன். கண்ணகி கோயில் குறித்து வந்த கேள்விக்கும் ஆறு துணைக் கேள்விகள் வரை அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் நமக்கு நிறைய பிஸினஸ் இருக்கின்றது என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) சென்னை மாநகராட்சி ஊழியர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டது குறித்து.

MR. DEPUTY SPEAKER: Under Rule 42 of the Tamil Nadu Assembly Rules, Dr. Hande has given notice of an Adjournment Motion to discuss the following matter of urgent public importance—

"That this House stands adjourned to discuss a matter of urgent public importance, namely, the plight of 3,000 workers of Corporation of Madras whose services have been terminated from 2nd April 1973."

I request the hon. Member to explain briefly how this matter will come under Rule 42.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 3,000 பேர்களை, திடீரென்று வேலை நீக்கம் செய்து உத்தரவிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றிப் பல பேர்கள் என்னை வந்து கேட்டுக்கொண்டு உடனடியாக அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். முன்பு ஒரு முறை இப்படி வேலைநீக்கம் செய்யப்பட்டபொழுது அவர்கள் எல்லாம் கார்ப்பரேஷன் ரிப்பன் பில்டிங் பூங்காவின் முன்னால் மறியல் செய்தார்கள். அதற்குப் பிறகு அந்த உத்தரவை வாபஸ் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிச் செய்தது தவறு என்று நான் சொல்லவில்லை. அவர்களை வேலைக்கு மறுபடியும் எடுத்துக்கொண்டார்கள்.

அந்த முறையிலே திடீரென்று இன்றைய தினம் வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டதன் காரணமாக அவர்கள் மீண்டும் இன்னொரு இடத்திலே போய் வேலைக்குச் சேர முடியாது, அவர்களுக்கு இப்பொழுது வேலை கிடைப்பது கஷ்டமாக இருக்கும். அப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலை இருப்பதால் அமைச்சர் அவர்கள் கார்ப்பரேஷனுக்கு உடனடியாக உத்தரவிட்டு மீண்டும் அவர்களை நீக்கியதைப்பற்றி மறுபரிசீலனை செய்வதற்கு உத்தரவிட்டால் நல்லதாக இருக்கும், ஆசிரியர்களுடைய குறைகளையெல்லாம் அரசாங்கம் புரிந்துகொண்டார்கள் என்ற மனத் திருப்தியும் அவர்களுக்கு இருக்கும் என்று

1973 ஏப்ரல் 5]   [டாக்டர் எச். வி. ஹாண்டே]

சொல்லிக்கொண்டு அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை நான் வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: *தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறியதைப் போன்று எங்கேயும் நிரந்தரமாகப் பணியாற்றுகின்ற ஊழியர்கள் யாரும் நீக்கப்படவில்லை. ஆண்டுதோறும் தாற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்கள் மார்ச் திங்களோடு அவர்கள் எந்த வேலைக்காக அவ்வாறு நியமிக்கப்பட்டார்களோ அந்த வேலை முடிந்தவுடன் வேலையைவிட்டு நீக்குவதுதான் வழக்கமாக இருந்து வந்திருக்கிறது.*

31—3—1973 பட்ஜெட் வருஷத்தோடு அவர்கள் நியமிக்கப்பட்ட வேலை முடிந்துவிட்ட காரணத்தினால் தாற்காலிகமாக வேலை நீக்கம்செய்து அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களும் 3,000 பேர்கள் அல்ல, 544 கேஷுவல் ஒர்க்கர்ஸ் தான் நீக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள். மீண்டும் வேலை வருகிறபொழுது அப்படி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் எடுத்துக்கொள்ளப் படுவார்கள். இதுவரையிலே 1, 2 ஆம் தேதிக்குப் பிறகு அதிலே இருநூறு பணியாளர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். மறுபடியும் வேலை வருகிறபொழுது மற்றவர்களும் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். ஆகவே நிரந்தரமாகப் பணியாற்றியவர்கள் யாரும் நீக்கப்படவில்லை. இந்த ஆண்டு பட்ஜெட் முடிந்துவிட்டதால் அவர்கள் வேலைநீக்கம் செய்யப் பட்டார்கள், அந்த 544 பேர்களிலும் 200 பேர்கள் மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அப்படி மீண்டும் எடுத்துக் கொள்ளப்படும்பொழுது புதிதாக இருப்பவர்களை எடுத்துக் கொள்ளாமல் ஏற்கனவே பணியாற்றி நீக்கப்பட்டவர்களுக்குத் தான் வேலைகள் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: *மீண்டும் தாற்காலிகமாக வேலை கொடுப்பதற்கு—டியூட்டர்ஸ் எவ்வாறு ஆண்டுக்கு ஒரு முறை நியமிக்கப்பட்டு பிறகு டெர்மினேட் செய்யப்பட்டு பிறகு ஒவ்வொரு ஆண்டும் நியமிக்கப்பட்டு வருகின்றார்களோ— ஒவ்வொரு ஆண்டும் டெம்பாரியாக போட்டு பிறகு நீக்கி பிறகு*

டெம்பாரியாகப் போடுவதைவிட 2, 3, 4 தடவைகள் டெம்பாரியாகப் போட்டிருந்தால் அவர்களையெல்லாம் நிரந்தரமாக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் கவனிக்கப்படவில்லை. இப்படியே போய்க்கொண்டிருந்தால் அவர்களுடைய ஏஜ் பார் ஆகிவிடும். அதற்குப் பிறகு அவர்கள் எந்தவிதமான சர்விஸிலும் எடுத்துக்கொள்ளப்பட முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதால் இதை முழுவதையும் காம்ப்ரஹென்ஸிவ் ஆக ஆராய்ந்து ஒரு நல்ல முடிவை அமைச்சர் அவர்கள் எடுத்து அவர்களுக்கு நிரந்தரமாக வேலை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: என்றென்றும் நிரந்தரமாக இருக்க வேண்டுமென்று எந்த எந்தப் பணிகளைக் கருதுகிறோமோ அந்தப் பணிகளைப் பொறுத்தவரையிலே அந்தப் பணிகளிலே அமர்த்தப்படுகின்றவர்களை நிரந்தரமாக்குவதுபற்றி யோசிக்கலாம். ஆனால் எல்லோரையும் ஆண்டு முழுவதும் நிரந்தரமாகப் பணியாற்றச் செய்ய வேண்டுமென்றால் மாநகராட்சிக்கு அதிகமான செலவுகள் ஆகும். சில பல பணிகள் நிரந்தரமாக இருக்க வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்படுமானால் அவை நிரந்தரமாக்கப்படும். இதுவரையிலே தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்கள்தான் மறுபடியும் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள் என்ற பழக்கம்தான் இருந்து வருகிறது. அவர்களைத் தவிர்த்து மற்றவர்களுக்கு அந்தப் பணிகள் கொடுக்கப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியின் பேரிலே ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். மந்திரி சபை விஸ்தரிக்கப்படப்போவதாகப் பத்திரிகைகளிலே செய்திகளைப் பார்க்கிறோம் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதை முடித்துவிடுகிறேன். இதற்கு என்னுடைய ரூலிங்கையே இன்னும் கொடுக்கவில்லையே. இதற்கு முதலிலே என்னுடைய தீர்ப்பைக் கொடுத்துவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கருதி இதற்கு நான் அனுமதியை மறுக்கிறேன்.